செ.வெ.எண்-30 நாள்-12.09.2021

# அரியலூர் மாவட்டம்
# தங்கள் குடும்பத்தின் பாதுகாப்பை கருதி தகுதியான அனைவரும் கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும் - மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.கே.எஸ்.கந்தசாமி, இ.ஆ.ப., அவர்கள் வேண்டுகோள்.

அரியலூர் மாவட்டம், வெண்மான்கொண்டான் மற்றும் நாச்சியார்பேட்டை ஆகிய கிராமங்களில் நடைபெற்று வரும் மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாமினை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / பால் உற்பத்தி மற்றும் பால் மேம்பாட்டு இயக்குநர் **திரு.கே.எஸ்.கந்தசாமி, இ.ஆ.ப.,** அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்களுடன் இன்று (12.09.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

உலகளாவிய கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு கொரோனா மூன்றாம் அலையின் தாக்கத்திலிருந்து பாதுகாத்து கொள்வதற்கு கொரோனா தடுப்பூசியே பாதுகாப்பானதாகும். ஆகவே மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின் அறிவுரையின்படி, கொரோனா வைரஸ் மாபெரும் தடுப்பூசி முகாம் அரியலூர் மாவட்டத்தில் 400 இடங்களில் 40,000 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

கொரோனா வைரஸ் தடுப்பூசி முகாமில் அதிக அளவிலான பொதுமக்களுக்கு தடுப்பூசி செலுத்தும் வகையில் வீடுவீடாக சென்று கணக்கெடுப்பு பணிகள் மூலம் ஊக்குவிப்பு செய்யப்பட்டு, ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செயயப்பட்டு வருகிறது. மேலும், கொரோனா வைரஸ் பற்றியும் தடுப்பூசி நன்மைகள் பற்றிய துண்டு பிரசுரங்கள் வழங்கி, முகாம் நடைபெறும் இடங்கள், நேரம் உள்ளிட்டவைகள் மூலமாக பொதுமக்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, தடுப்பூசியின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, இன்று நடைபெற்று வரும் மாபெரும் கொரோனா தடுப்பூசி பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்கள், தடுப்பூசி செலுத்த வருகை தந்த பொதுமக்களிடம் தற்பொழுது பெரும் சவலாக விளங்கி வரும் கொரோனா பெருந்தொற்றிலிருந்து தங்களையும், தங்களது குடும்பத்தாரையும் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு குடும்பத்திலுள்ள 18-வயதிற்கு மேற்பட்ட அனைவரும் கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும். மேலும், தடுப்பூசி செலுத்திக்கொள்வதன் பயன்கள் குறித்து அருகிலுள்ள பொதுமக்களுக்கும் தெரிவித்து 100 சதவீதம் கொரோனா செலுத்தப்பட்ட மாவட்டமாக அரியலூர் மாவட்டத்தை மாற்றிட அனைத்து பொதுமக்களுக்கும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார்.

மேலும், மருத்துவத்துறையின் சார்பில் போதுமான அளவு தடுப்பூசிகள் தேவைப்படும் இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதா என்பது குறித்தும், தடுப்பூசி முகாம்களுக்கு பொதுமக்களை அதிக அளவில் வருகை தருவதற்கும், அவர்களுக்கு தேவையான தகவல்களை அளிப்பதற்கும் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதா என்பது குறித்தும், தடுப்பூசி செலுத்துவதற்கு முன்பாக அனைத்து நபர்களுக்கும் அவர்களின் குறித்த விபரங்கள் சேகரிக்கப்படுகிறதா என்பது குறித்தும், அவர்களின் உடல்நிலை குறித்து பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறதா என்பது குறித்தும், தடுப்பூசிஜ செலுத்திய பிறகு யாருக்கேனும் உடல் உபாதைகள் ஏதேனும் ஏற்படுகின்றனவா, அவ்வாறு ஏற்படும்பொழுது மேற்கொள்ளப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் அலுவலர்களிடம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்கள் கேட்டறிந்தார்.

முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், ஒட்டக்கோவில், பொய்யாதநல்லூர், இராயபுரம், செந்துறை, பெரியாக்குறிச்சி, மருவத்தூர், பொன்பரப்பி, ஆதனகுறிச்சி, வாரியங்காவல் உள்ளிட்ட இடங்களில் நடைபெற்று வரும் மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாமினை பார்வையிட்டு, முகாமில் அதிக அளவிலான பொதுமக்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தும் வகையில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்து பார்வையிட்டார்கள்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.ஜெய்னுலாப்தீன், கோட்டாட்சியர்கள் திரு.ஏழுமலை (அரியலூர்), திரு.அமர்நாத் (உடையார்பாளையம்), துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.கீதாராணி, வட்டாட்சியர்கள் திரு.குமரய்யா (செந்துறை), திரு.முத்துகிருஷ்ணன் (ஆண்டிமடம்), திரு.ஆனந்தன் (ஜெயங்கொண்டம்) மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**